Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

MONDAY, MARCH 03, 2025

புதன்கிழமை 05, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 172 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# வேலைநிறுத்தம் வாபஸ்

புதன்கிழமை (05) திட்டமிடப்பட்டிருந்த நாடு தழுவிய வேலைநிறுத்தம், சுகாதார அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவுடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து, வாபஸ் பெறப்பட்டுள்ளதாக அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) அறிவித்துள்ளது.





சௌனன் தோட்ட தீயில்

# லயன் தீக்கிரை: 91 பேர் நிர்க்கதி; ஐவர் காயம்

தமிழ்மிரர் நிருபர்கள்

ஹட்டன் - சௌனன் தோட்டத்தில் கே.எம்.பிரிவில் திங்கட்கிழமை (03) இரவு 7.30 மணியளவில் ஏற்பட்ட தீயில் லயன் குடியிருப்பு ஒன்று எரிந்து நாசமாகியது. இதில், 30 குடும்பங்களைச் சேர்ந்த 91 பேர் வரையில் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர். ஐவர் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்ட பொதுமக்கள் கடும் பிரயத்தனத்தின் பின்னர் தீயை சுமார் 3 மணி நேரத்துக்குப் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஹட்டன் தீயணைப்பு பிரிவினரும் தீயை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவியுள்ளனர்.

தீயைக் கட்டுத்த முற்பட்ட போது தீக்காயங்களுக்கு உள்ளான இருவர் கடும் காயமுற்றுள்ளனர். மூவர் சிறு காயங்களுடன் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மின்னொழுக்கு காரணமாக தீ பரவி இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். 30 குடும்பங்களைச் சேர்ந்த 91 பேர் சௌனன் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டு, தோட்ட சிறுவர் நிலையத்திற்கு தற்போது மாற்றப்பட்டுள்ளனர்.

20 வீடுகளிலும் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன. சம்பவத்தைக் கேள்வியுற்றதும், ஸ்தலத்துக்கு விரைந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளை, தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடி மேற்கொண்டார்.

# 'சட்டை ஊசி வடை'



வவுனியாவில் உள்ள உணவகம் ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட உளுந்து வடை ஒன்றுக்குள் சட்டை ஊசி ஒன்று காணப்பட்டுள்ளது.

எனினும், அந்த உளுந்து வடையை வாங்கிய நபர் 'சட்டை ஊசி வடை' தொடர்பில் உணவக முகாமையாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

தொடர்ச்சி P2


# "அஸ்வெசும பயனாளிகள் சிலர் போதைக்கு அடிமை"



'அஸ்வெசும' சலுகைகளைப் பெறுபவர்களில் சிலர் போதைப்பொருளுக்கு அடிமையாகி வருவதாகவும் இது தலையீட்டின் அவசரத் தேவையை வலியுறுத்துகிறது எனவும் பாராளுமன்றக் குழு கவலை தெரிவித்துள்ளது.


சமீபத்தில் பாராளுமன்ற வளாகத்தில் அமைச்சர் உபாலி பன்னிலகே தலைமையில் நடைபெற்ற கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் தொடர்பான அமைச்சர்கள் ஆலோசனைக் குழுவின் தொடக்கக் கூட்டத்தின் போது இது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




# வெளிச்ச குண்டு வெடித்ததில் இளைஞன் படுகாயம்

கனகராசா சரவணன்



காத்தான்குடி, ஆரையம்பதி திருநீற்றுக்கேணி பிரதேச கடற்கரைபகுதியில் கரைடியாதுங்கியுள்ள நிலையில், இருந்த மர்மப்பொருள் ஒன்றை கண்டெடுத்த நிலையில், அது வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் திங்கட்கிழமை (03) மாலையில் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# "புதிய விலை சூத்திரத்துக்கு ஆதரவு"



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) அறிமுகப்படுத்திய புதிய விலை நிர்ணய சூத்திரத்திற்கு எரிபொருள் விநியோகஸ்தர்கள் உடன் பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய ஜெயதிஸ்ஸ, அந்த சூத்திரம் இப்போது அமலில் உள்ளது என்பதை உறுதிப்படுத்தினார்.

தொடர்ச்சி P2

# "தமிழரசு சில்லறை கட்சி கிடையாது"

நிதர்ஷன் வினோத்



கூட்டமைப்பாக செயல்பட தமிழரசு கட்சியின் கதவுகள் திறந்தே உள்ளன எனத் தெரிவித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ. கே. சிவஞானம், ! தமிழரசு சில்லறைக் கட்சி கிடையாது என்றார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (04) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சியோடு ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப் ஆகிய மூன்று கட்சிகளுமாக நான்கு கட்சிகள் இணைந்து கூட்டமைப்பாக செயற்பட்டு வந்திருந்தோம்.

ஆனால், கடந்த உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்தில் தனித் தனியாக போட்டியிட்டு, கூட்டாக செயற்படுவது என தமிழரசுக் கட்சி தீர்மானித்தது. ஆனால், அதை தவறாக சித்தரித்து தமிழரசு தனிவழி என்றவாறாக பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு கூட்டமைப்பில் இருந்து கட்சிகள் வெளியேறியிருந்தன.

நாங்கள் கூட்டமைப்பை உடைக்க வேண்டும் என நினைக்கவில்லை. இப்போது கூட முன்னரைப் போல மீளவும் கூட்டமைப்பாக ஒன்று சேர்ந்து இயங்குவதற்கானஅழைப்பையே விடுத்திருக்கிறோம். அந்த முயற்சியின் தொடராக கூட்டமைப்பில் இருந்த கட்சிகளின் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடி இருக்கிறேன்.

தொடர்ச்சி P2



'வாள்வெட்டை பேசிய சாணக்கியனின்

# வாயை அடைக்க கடும் முயற்சி

மட்டக்களப்பில் அதிகரித்துள்ள வாள்வெட்டு சம்பவங்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து இலங்கை தமிழரசுக் கட்சியின் சாணக்கியன் எம். பி உரையாற்றிய போது, அது "ஒழுங்குப் பிரச்சினையல்ல" என்று கூறி அவரின் உரையைத் தொடர்வதற்கு சபாநாயகர் அனுமதி வழங்காமையினால் சபையில் செவ்வாய்க்கிழமை (04) அமைதியின்மை ஏற்பட்டது.

தொடர்ச்சி P2



# "கிழக்கில் முஸ்லிம் தீவிரவாத குழு"

கிழக்கு மாகாணத்தில் இயங்கும் ஒரு முஸ்லிம் தீவிரவாதக் குழு தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# "சுதந்திரமாக வாழ விரும்பினேன்"

கொழும்பிலிருந்து கண்டிக்கு அதிக சக்தி வாய்ந்த மோட்டார் சைக்கிளில் நிர்வாணமாகவும், உடலில் எந்த ஆடையும் இல்லாமல் பயணித்த இளைஞன் ஒருவரை, வீதித் தடைகளைப் பயன்படுத்தி மிகவும் சிரமப்பட்டு கைது செய்ததாக கடுகண்ணாவ பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி-கொழும்பு வீதியில் அதிக சக்தி வாய்ந்த மோட்டார் சைக்கிளில் அந்த இளைஞன் பயணிப்பதைப் பல பொலிஸ் அதிகாரிகள் கவனித்து, அவரை கைது செய்யப் பின் தொடர்ந்த போதிலும்,

தொடர்ச்சி P2

# "ரூ.2,000 கேட்டவருக்கு 1,700 ரூபாய் போதுமா"?



ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்ரமசிங்க பெருந்தோட்ட மக்களுக்கு 1,700 ரூபாய் சம்பளத்தை வழங்கிய போது, அதற்கு அன்று எதிர்ப்பு தெரிவித்து 2,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று குரல் எழுப்பிய தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இன்று 1,700 ரூபாய் போதும் என்கிறார். ஆகவே பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# செலவு செய்யாது திருப்பி கொடுத்தார்



ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டில் பங்கேற்பதற்காக மேலதிக செலவுகளுக்காக வழங்கப்பட்ட 240 அமெரிக்க டொலர்களை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் அரசாங்கத்திற்கு திருப்பி கொடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## "ரூ.2,000 கேட்டவருக்கு 1,700 ரூபாய் போதுமா"?

அவர் மேலும் பேசுகையில், மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளதால் அரசாங்கம் எவரின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்காமல் செயற்பட்டு தீர்மானங்களை எடுக்கிறது. இதன் காரணமாக தேசிய கொள்கை சபை ஒன்றை நியமிக்குமாறு யோசனை ஒன்றை கொண்டு வந்தேன். இந்த சபை ஜனாதிபதியின் விடயதானத்துக்குள் சுயாதீனமாக செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினேன். ஆனால், இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

அரசியல் பழிவாங்கல் பற்றி தற்போது பேசப்படுகிறது. இதற்கு ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பொறுப்புக் கூற வேண்டும். அரசியல் பழிவாங்கல்களுக்கு அச்சமடைந்து அரச சேவையாளர்கள் சேவை கட்டமைப்பில் அதிருப்தி அடைந்துள்ளார்கள். இந்நிலை நீடித்தால் அரச சேவை கட்டமைப்பு முழுமையாக பலவீனமடைந்து விடும்மு

ன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவின் ஆட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன அனுமதி பத்திரம் வழங்கப்படவில்லை. இந்த அரசாங்கமும் வழங்கவில்லை. அதை வரவேற்கிறோம். இருப்பினும் எமது அரசாங்கத்தின் அரச சேவையில் முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்று துறையினருக்கு வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், தற்போது அவ்வாறில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பெருந்தோட்ட மக்களுக்கு 1,000 ரூபாய் சம்பளத்தை வழங்கினார். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 1,700 ரூபாய் வழங்கினார். இந்த 1,700 ரூபாய் போதாது என்று கடும் எதிர்ப்பை அப்போது வெளிப்படுத்திய தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க 2,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று அன்று குறிப்பிட்டார். ஆனால் தற்போது 1,700 ரூபாய் போதும் என்கிறார். ஆகவே பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரத்தில் அரசாங்கத்தின் உண்மை தன்மை என்ன?

வைத்தியர்களுக்கு 1980ஆம் ஆண்டு முதல் மேலதிக கடமைக்காக விசேட கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இதனை நீக்க வேண்டாம் என்றே வைத்தியர்கள் குறிப்பிடுகிறார்கள். இவ்விடயம் தொடர்பில் எவருடன் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது? எனவே, இவ்வாறு தன்னிச்சையாக செயற்படுவதை அரசாங்கம் நிறுத்திக்கொள்ள கொள்ள வேண்டும் என்றார்.

## "அஸ்வெசும பயனாளிகள் சிலர் போதைக்கு அடிமை"

போதைப்பொருள் பயன்பாட்டுக்கு ஆளாகாமல் தடுக்க பாடசாலை மட்டத்தில் மிகவும் பயனுள்ள விழிப்புணர்வு திட்டங்களை மு

ன்னெடுப்பதன் அவசியத்தை அக்குழு எடுத்துக்காட்டியுள்ளது.

அஸ்வெசும சலுகைகளைப் பெறுபவர்களில் கூட சிலர் போதைப்பொருளுக்கு அடிமையாகிவிட்டதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர், இதில் தலையிட வேண்டியதன் அவசரத் தேவையை வலியுறுத்தியுள்ளனர்.

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான ஓய்வூதிய திட்டங்களைப் போன்ற சமூகப் பாதுகாப்பு பொறிமுறையை அறிமுகப்படுத்துதல், மாதிரி சமூக வலுப்படுத்தும் கிராமங்கள் மூலம் 'ஸ்மார்ட் கிராமங்கள்' திட்டத்தை செயல்படுத்துதல், கிராமப்புற நுண்நிதிக் கடன்களின் சவால்களை எதிர்கொள்வது, மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை தீர்ப்பது மற்றும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சனைகளை சமாளிப்பது குறித்து அமைச்சர்கள் ஆலோசனை குழு கவனம் செலுத்தியுள்ளது.

## வெளிச்ச குண்டு வெடித்ததில் இளைஞன் படுகாயம்

திருநீற்றுக்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 4 இளைஞர்கள் சம்பவ தினம் மாலையில் குறித்த கடலில் நீராடச் சென்றனர். இதன்போது அங்குக் கரையொதுங்கி இருந்த மர்ம பொருள் ஒன்றைக் கண்டெடுத்து, அதிலிருந்த நூலை இழுத்துள்ளனர். அப்போது அது வெடித்துள்ளது.

அதில், காயமடைந்த 25 வயதுடைய வரதராஜன் கவிந்துஜன், மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஸ்தலத்துக்கு விரைந்த குண்டு செயலிழக்கும் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் பரிசோதித்ததில் அது வெளிச்ச குண்டு என கண்டுபிடித்ததுடன் வெடித்துச் சிதறிய அதன் பாகங்களை மீட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 'சட்டை ஊசி வடை'

எனினும், இது தவறுதலாக இடம்பெற்றுள்ளதாகவும், இனி வரும் காலத்தில் இவ்வாறு நடைபெறாது எனக்கூறி, வடையை வாங்கியவரிடம் அந்த முகாமையாளர் முகாமையாளர் மன்னிப்பு கோரியதுடன், வடைக்கான பணத்தையும் வாங்கவில்லை என அறியமுடிகின்றது.

# "தமிழரசு சில்லறை கட்சி கிடையாது"

ஆனால், இக் கட்சிகளின் தலைவர்களை நான் சந்தித்த போது சாதகமாகப் பரிசீலிப்பதாகச் சொன்னவர்கள் மறுநாளே ஒரு புதிய கூட்டணியை உருவாக்கியிருக்கின்றனர்.

இப்படி ஒரு திட்டம் அவர்களிடம் இருக்கிறது என்றால் அதை நேரடியாக எங்களிடத்தே சொல்லியிருக்கலாம். அதைவிடுத்து ஏமாற்று வித்தை காட்டியமையே எமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

நாங்கள் அவர்களின் புதிய கூட்டணியை எதிர்க்கவில்லை. அது அவர்களின் உரிமை. ஆனால், அவர்களின் செயற்பாடே எமக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தான் நான் சொல்லி இருக்கிறேன்.

ஆனால், தாம் ஒரு கூட்டணியை அமைத்துள்ளதாகவும் எங்களது கட்சியின் மத்தியக் குழுவுடன் பேசிவிட்டு வருமாறும் புளொட் தலைவர் சித்தார்த்தன் எனக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இவ்வாறு அவர்கள் கூறுவதில் என்ன அர்த்தம் உள்ளது. நாங்கள் ஒன்றும் சில்லறை கட்சி அல்ல. எம்மை யாரும் மலினப்படுத்தல் கூடாது என்றார்.

ஈழத் தமிழினத்திற்காக நாங்கள் மீளவும் கூட்டமைப்பாக இயங்குவோம் வாருங்கள் என்ற இணக்கத்தின் அடிப்படையில் அழைப்பு விடுத்தோம். அதைவிடுத்து உங்களது கூட்டணியுடன் நாங்கள் வரப்போவதாகச் சொல்லவில்லை.

இந்த விவகாரத்தில் மிகவும் அப்பாவித்தனமாக நாங்கள் இருந்து விட்டோமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால், நாங்கள் இப்போதும் கூறுகிறோம் கூட்டமைப்பில் இருந்து செயற்பட்டவர்கள் மீளவும் கூட்டமைப்பிற்கு வருவதற்கான கதவுகள் திறந்தே உள்ளன.

அவர்கள் வராவிட்டால் தமிழரசுக் கட்சி மீண்டும் தனி வழியில் போவது இயல்பானது.

ஆகையால், தமிழ்த் தலைமைகளைக் கொண்ட கட்சிகளுக்கே தமிழ் மக்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதற்காக எங்களுக்குப் பயம் என்றில்லை. தந்தை வழியில் வந்தவன் நான். தேசிய தலைவரின் கொள்கையில் நிற்கிறேன். எனக்குப் பயம் கிடையாது. ஆனால், தமிழர் நலன் சார்ந்து செயல்பட வேண்டியது அவசியம். அந்த அடிப்படையில் தான் சில முயற்சிகளை எடுத்து செயல்படுகிறோம் என்றார்.

## "சுதந்திரமாக வாழ விரும்பினேன்"

அவரை அடைய முடியவில்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கேகாலை மற்றும் மாவனெல்ல பொலிஸார் அந்த நபரைத் துரத்திச் சென்ற போதிலும், அவர்களால் அவரைக் கைது செய்ய முடியவில்லை. கடுகண்ணாவை மற்றும் பேராதனை பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்த பின்னர், கடுகண்ணாவை பொலிஸார் வீதித் தடைகளைப் பயன்படுத்தி வாகனங்களைத் தடுத்து அந்த நபரைப் பிடித்தனர்.

கைது செய்யப்பட்ட பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, அவர் பீதுருதலாகலைப் பார்வையிட வந்ததாகக் கூறினார். அவர் அஹங்கமவிலிருந்து வந்து கொழும்பில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கியதாகவும், திங்கட்கிழமை (03) காலை புறப்பட்டு தனது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்ததாகவும், அவ்வப்போது தான் அணிந்திருந்த ஆடைகளைக் கழற்றி வீசிவிட்டதாகவும் கூறினார்.

வாழ்க்கையை சுதந்திரமாக அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அவர் தனது ஆடைகளைக் கழற்றியதாகவும், அவர் பயன்படுத்தி வந்த ஆப்பிள் போனையும் வழியில் தூக்கி எறிந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், கண்டி நீதவான் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (03) ஆஜர்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் 5ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## செலவு செய்யாது திருப்பி கொடுத்தார்

ஜெனீவாவில் கடந்த பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை ஐக்கிய நாடுகள் சபையின் "பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை மாநாட்டின் (CEDAW)" 90ஆவது அமர்வு நடைபெற்றுள்ளது.

இந்த அமர்வில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் கலந்து கொண்டுள்ளார்.

இந்நிலையில், மாநாட்டில் பங்கேற்பதற்காக மேலதிக செலவுகளுக்காக ஒரு நாளைக்கு 40 அமெரிக்க டொலர்கள் படி 6 நாட்களுக்கு வழங்கப்பட்ட 240 அமெரிக்க டொலர்களை அரசாங்கத்திற்கு திருப்பி கொடுத்துள்ளார்.

அவர் அந்த பணத்தை செலவு செய்யாமல் அப்படியே திருப்பி கொடுத்துள்ளார். பணத்தை திருப்பிக் கொடுத்தமைக்கான பற்றுச்சீட்டை அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

## "புதிய விலை சூத்திரத்துக்கு ஆதரவு"

விநியோகஸ்தர்கள் சமர்ப்பித்த திட்டங்களை மறு ஆய்வு செய்ய எதிர்வரும் 18 ஆம் திகதி மற்றொரு கலந்துரையாடல் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

CPC அறிமுகப்படுத்திய சூத்திரம் ஒப்புக்கொள்ளப்பட்டு அதன்படி செயல்படுத்தப்படும். இதற்கிடையில், எரிபொருள் விநியோகஸ்தர்கள் பல கவலைகளை எழுப்பியுள்ளனர்.

புதிய சூத்திரம் நடைமுறையில் இருந்தாலும், அவர்களின் திட்டங்களை மறுபரிசீலனை செய்வதற்கு எதிர்வரும் 18ஆம் திகதி காலை மற்றொரு கலந்துரையாடல் நடைபெறும். எனவே, எரிபொருள் விநியோகம் தொடர்பாக எந்த பிரச்சினையும் இல்லை," என்று ஜயதிஸ்ஸ கூறினார்.

## "கிழக்கில் முஸ்லிம் தீவிரவாத குழு"

ஊடகங்களுக்கு பேட்டி அளித்த அவர், தீவிரவாதக் குழுவைப் பற்றிய கூடுதல் விவரங்களை கண்டறியும் பணியில் பொலிஸ் உளவுத்துறை மற்றும் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளதாக கூறினார்.

இந்த சம்பவம் குறித்து பாராளுமன்றத்தில் சில தகவல்களை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வழங்கினார் என்று அமைச்சர் கூறினார்.

இந்த தீவிரவாத குழுவின் நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்புப் படையினர் மிகுந்த விழிப்புடன் உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## வாயை அடைக்க கடும் முயற்சி

இதன்போது தொடர்ந்து ஒழுங்குப் பிரச்சினையை முன்வைக்க சாணக்கியன் எம்.பி அனுமதி கோரி கோஷம் எழுப்பிய நிலையில், அவரை அமைதியாக இருக்குமாறு கூறிய சபாநாயகர், "சபை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டால் உங்களை வெளியேற்ற நேரிடும்" என்றும் எச்சரித்தார்.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை(04) முற்பகல் 9.30 மணியளவில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரட்ன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததும். சாணக்கியன் எம்.பி. ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்ற சபாநாயகரிடம் அனுமதி கோரினார்.

அதற்கு சபாநாயகர் அனுமதி வழங்கிய நிலையில், தனது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து சாணக்கியன் எம்.பி உரையாற்ற ஆரம்பித்தார்.

இதன்போது அவர் குறிப்பிடுகையில், கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி ஆரையம்பதியில் வாள் வெட்டுச் சம்பவமொன்று நடந்தது. இதனைத் தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை (04) மட்டக்களப்பு கல்லடியில் வாள் வெட்டு குழுவால் கத்திவெட்டு சம்பவமொன்று நடந்துள்ளது என்று கூறினார்.

இவ்வேளையில் அவரின் உரையை இடைநிறுத்தி சபாநாயகர், இது ஒழுங்கு பிரச்சினையல்ல. நீங்கள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தைக் கொண்டு வந்து அதைச் செய்யலாம். இது தேசியப் பிரச்சினை அல்ல என்றார்.

இதனைத் தொடர்ந்து, மீண்டும் உரையாற்றிய சாணக்கியன் எம்.பி. ஜனாதிபதி அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதாள குழுக்களால் சில குழப்பங்கள் ஏற்படலாம் என்று கூறியிருந்தார். எனக்கூறி உரையை தொடர்ந்த போதும், மீண்டும் அவரின் உரையை இடைநிறுத்திய சபாநாயகர், உங்களுக்கு பேச சந்தர்ப்பம் வழங்க முடியாது என்று கூறி, சபையில் வழமையான நடவடிக்கையைத் தொடர்வதற்கு அறிவித்தார்.

இதன்போது தனக்குத் தொடர்ந்து பேச அனுமதி வழங்குமாறு சாணக்கியன் எம்.பி. சபாநாயகருக்கு கோரிக்கை விடுத்தார்.

எனினும் சபாநாயகர், அதற்கு அனுமதி வழங்காத நிலையில், தொடர்ந்து கோசமெழுப்பி அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்தார். இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் அவருக்குப் பேச அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர். இதனால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

இவ்வேளை, சபை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்த முயன்றால் உங்களை வெளியேற்ற நேரிடும் என்று சபாநாயகர் எச்சரித்ததோடு, நீங்கள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் அது தொடர்பான பிரேரணையை கொண்டு வாருங்கள் என்றார்.

இதன்போது ஒழுங்கு பிரச்சினையை எழுப்பி எழுந்த யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன், நிலையியல் கட்டளை கீழ் எம்.பி. ஒருவருக்கு முக்கியமான பிரச்சினையை எழுப்ப முடியும். நானும் கட்சித் தலைவர். நாங்கள் கூறுவதை நீங்கள் கேட்க வேண்டும். எமது பிரதேசங்களில் துண்டு துண்டாக மக்களை வெட்டுகின்றனர். இதுபற்றி இங்கே கூற முடியாவிட்டால் எங்கே போய் கூறுவது. இவர் கிழக்கில் இருக்கின்றார் நான் வடக்கில் இருக்கிறேன். மற்றையவர்கள் பேசும் போது நேரம் வழங்கும் நீங்கள் ஏன் எங்களுக்கு நேரம் வழங்குவதில்லை. நீங்கள் தவறு செய்கிறீர்கள். . நாங்கள் எழுந்தால் மட்டும் ஏன் ஒலிவாங்கியை வழங்க முடியாது. நாங்கள் சிங்களத்தில், தமிழில் பேசுவதை உங்களுக்கு கேட்க முடியாதா? என்றார்.

இதனைத் தொடர்ந்து, மீண்டும் அறிவித்த சபாநாயகர், இதுவே ஒழுங்கு விதி, சபை நடவடிக்கைகளை தொடருங்கள். அர்ச்சுனா எம்.பிக்கு இது தொடர்பில் எத்தனையாவது கூற வேண்டுமானால் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையைக் கொண்டு வரலாம் என்றார்.

எனினும், தனது ஆசனத்தில் இருந்து எழுந்திருந்த சாணக்கியன் எம்பி தனக்குப் பேசுவதற்கு தொடர்ந்து அனுமதி கோரினார்.

அவருக்கு ஆதரவாக எதிர்க்கட்சி பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்கவும் எழுந்து அவருக்கு ஒரு நிமிடத்தை வழங்குங்கள் என்று வலியுறுத்தினார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் சாணக்கியன் எம்.பிக்கு பேசுவதற்கு அனுமதி வழங்குமாறு கோரினார்.

பின்னர், சாணக்கியன் எம்.பிக்கு சபாநாயகர் பேச அனுமதி வழங்கினார்.

# கல்விசாரா ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்களில் உள்ள கல்விசாரா ஊழியர்கள் , சம்பள உயர்வு, ஆட்சேர்ப்பு, மேலதிக நேரக் கொடுப்பனவு, வரவு-செலவுத் திட்டத்தில் தமது சம்பள முரண்பாட்டிற்கு உரிய தீர்வு வழங்கப்படவில்லை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து செவ்வாய்க்கிழமை (04) அன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(தமிழ்மிரர் நிருபர்கள்)



















# "வாய்மூடி இருப்பதே சிறந்தது"



இந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் எதனைக் கதைத்தாலும் அது பிரச்சினையாகிறது. எனவே, அரசாங்கத்தில் உள்ளவர்கள் வாய்மூடி இருப்பதே சிறந்தது. அரச அதிகாரிகள் செய்ய வேண்டிய பணிகளை அரசியல்வாதிகள் செய்தால் பாரிய நெருக்கடிகள் தான் ஏற்படும் என புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(04) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் மார்ச் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையில் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. எனினும், வாக்களிப்புக்கான திகதி அறிவிக்கப்படவில்லை. வேட்புமனு தாக்கல் நிறைவு பெறும் தினத்தன்று வாக்களிப்பு திகதியை அறிவிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அரசாங்கத்தின் மீதான மக்களின் நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்தும் என்பதால் இந்த தேர்தல் அரசாங்கத்துக்கு மிகவும் முக்கியமானது. சவாலானது.

காட்டு விலங்குகளை எதிர்வரும் 15ஆம் திகதி கணக்கெடுப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இதுவும் விமர்சனங்களுக்கும் கிண்டல்களுக்கு உள்ளாகியுள்ளது. அரச அதிகாரிகள் செய்ய வேண்டிய பணிகளை அரசியல்வாதிகள் செய்தால் பாரிய நெருக்கடிகள் ஏற்படும் என்றார்.



# "நிலைமைகளை உணர்ந்து செயற்பட வேண்டும்"

மின் சக்தி அமைச்சு எமது நாட்டின் முதுகெலும்பு என்பதுடன், முக்கியமான திணைக்களங்களை கொண்ட அமைச்சாகும். இந்த அமைச்சின் பணிகள் சிறப்பாக அமைய வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கிறோம். அதேபோல் நாட்டு மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, நாட்டினுடைய பொருளாதார நிலையினை கருத்திற்கொண்டு இந்த அமைச்சு செயற்பட வேண்டிய தேவையிருக்கிறது. என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (03) நடைபெற்ற 2025 வரவு - செலவு திட்டத்தின் குழுநிலை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த நாட்களாக ஒரு பெரிய எரிபொருள் பிரச்சினை நாட்டில் உருவாகியது. பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கிவந்த மூன்று வீத தரகுப் பணத்தை உடனடியாக நிறுத்திக்கொண்டதே இப்பிரச்சினைக்கு காரணமாகும். பெற்றோலிய கூட்டுத்தாபனம் மூன்று வீத தரகுப் பணத்தை விநியோகஸ்தர்களுக்கு நீண்டகாலமாகக் கொடுத்து வந்தது, அதில்தான் அவர்களது மொத்த செலவினங்களும் அடங்குகிறது என்பது விநியோகஸ்தர்கள் மூலம் அறியக்கிடைக்கிறது. இந்த 3 வீத தரகுப் பணத்தை சிபெட்கோ நிறுவனம் மாத்திரமல்லாது, அமெரிக்கா, அவுஸ்திரேலியா நிறுவனங்களும் வழங்குகின்றன . எனவே இவ்வாறான நிலையில் பெற்றோலிய கூட்டுத்தாபனம் திடீரென இவ்வாறானதொரு முடிவு எடுத்தமை தவறான தீர்மானமாகும். அவர்களுடன் கலந்துரையாடி இது தொடர்பில் ஒரு தீர்மானத்திற்கு வந்திருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதேபோல், வணக்கஸ்தலங்களுக்கு கடந்த காலங்களில் சூரிய கலம் மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இன்னும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பள்ளிவாசல் மற்றும் தேவாலயங்களுக்கு வலுசக்தி அமைச்சு மூலம் இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. தற்போதைய சூழ்நிலைகளில் மதஸ்தலங்கள் நிதி நிலைமைகளை மேற்கொள்ள பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்ற சூழ்நிலை காணப்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டு மதஸ்தலங்களுக்கு சூரிய மின்கலம் ஊடாக மின் சக்தியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சூரிய கலம் மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## வீதியோர வியாபாரிகள் மோதல்:

# ஒருவர் பலி; 4 பேர் கைது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு - கல்லடி பாலத்துக்கு அருகில் மரக்கறி வியாபாரம் செய்வோருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து, இடம்பெற்ற சண்டையில், கூரிய ஆயுதத்தால் தாக்கி வர்த்தகர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று திங்கட்கிழமை (03) இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதல் மேற்கொண்டவர்கள் என்ற சந்தேகத்தில் 4 பேரைக் கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 31 வயதுடைய டிலக்ஷன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு அரசடி பகுதிக்கும் கல்லடி பாலத்துக்கும் இடையிலுள்ள வீதியோரத்தில் பட்டா ரக வாகனங்களில் மரக்கறிகளைக் கொண்டு வந்து வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவது வழமை




.இந்நிலையில் சம்பவ தினமான திங்கட்கிழமை (03) இரவு சுமார் 7.00 மணியளவில் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சகோதரர் தனது பட்டா ரக வாகனத்தை நிறுத்தி வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அந்த வாகனத்துக்கு அருகாமையில் இன்னொரு வர்த்தகர் தனது வாகனத்தை நிறுத்தி வியாபாரம் செய்த நிலையில் இருவருக்கும் இடையே வர்த்தக போட்டி காரணமாக வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, குறித்த சகோதரர் தனது அண்ணாவுக்கு கையடக்க தொலைபேசி ஊடாக அழைப்பு விடுத்து வரவழைத்துள்ளார். அவர் அங்கு வந்து சகோதரனுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட வர்த்தகர் மீது தாக்குதல் மேற்கொண்டதை அடுத்து அங்கு இருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதையடுத்து அவர் மீது 4 பேர் கத்தி மற்றும் கூரிய ஆயுதங்களால் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதில் படுகாயமடைந்த குறித்த நபர் மட்டு. போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் .

இதனிடையே தாக்குதலை மேற்கொண்டு அங்கிருந்து தப்பியோடிய கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு வர்த்தகர்களும் பொலிஸில் சரணடைந்ததையடுத்து அவர்களைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு தடயவியல் பிரிவு பொலிஸார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பெரும் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய தளபதி நியமனம்



இலங்கை விமானப்படையின் புதிய தலைமைத் தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் எல். எச்.லசித சுமனவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரின் நியமனக் கடிதத்தை செவ்வாய்க்கிழமை (04) அன்று முப்படைகளின் தளபதி என்ற ரீதியில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அதிகாரப்பூர்வமாக ஒப்படைத்துள்ளார்.



# "வேணாம் வேணாம் சாவு வேணாம்"

நிதர்ஷன் வினோத்

மதுபான விற்பனை நிலையத்திற்கு எதிராக நெடுந்தீவில் மக்கள் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாக செவ்வாய்க்கிழமை(04) காலையில் ஒன்று திரண்ட மக்கள் மதுபானசாலைக்கு எதிராக பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நெடுந்தீவு மதுபான விற்பனை நிலையத்திற்கு எதிராக அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்திருந்தனர்.

நெடுந்தீவில் வடக்கு மாகாண ஆளுநரின் பங்கேற்புடன் நடமாடும் சேவை புதன்கிழமை (05) நடைபெறவுள்ள நிலையில் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது, "குடியை விடு பிள்ளைகளைப் படிக்க விடு", "அரசியல் பேசவில்லை எம் ஆதங்கம் பேசுகிறது", "போதையை ஒழிப்போம்", "அதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்", "வேண்டாம் வேணாம் சாவு வேண்டாம்", "எமது குடும்ப விளக்கை அணைத்து விடாதே" உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தை முன்னெடுத்தது குறிப்பிடத்தக்கது.



# 10,000 சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட சிகரெட்டுகளுடன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து செவ்வாய்க்கிழமை(04) அன்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகம் மேற்கொண்ட சோதனையின் போது துபாயிலிருந்து இலங்கைக்கு வந்த ஒருவர் 10,000 சிகரெட்டுகளுடன் (50 அட்டைப் பெட்டிகள்) கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலன்னறுவையை சேர்ந்த 32 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

விற்பனைக்கு

கடைகள் மற்றும் துணிக்கடைகள் அமைக்க உகந்த 25 பேர்ச் நிலம், வீடொன்றுடன், கொழும்பு -15 விஸ்டைக் வீதியில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுககு: 077-3850798

# குட்டி தேர்தலில் உங்கள் தெரிவு சரியானதாக இருக்க வேண்டும்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதி தேர்தலில் வென்றதன் பின்னர் நடத்திய பாராளுமன்றத் தேர்தலில், ஆளும் தேசிய மக்கள் சக்தி மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குப் பலத்தால் வெற்றியீட்டி 159 உறுப்பினர்களை தனதாக்கிக் கொண்டது.

அதற்கு பின்னர் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான திருத்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இந்நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது. 2025 மார்ச் 17 முதல் 2025 மார்ச் 20 வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி, எந்த ஒரு கட்சியுடனும் கூட்டுச் சேராது என்பது உறுதியாகும்.

ஏனைய கட்சிகள், தனியாகவும், கூட்டணி அமைத்தும் போட்டியிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தலில் பழைய கட்சிகள் துடைத்தெறியப்பட்டுள்ளன என்பதால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களமிறங்குவது தொடர்பில், கட்சிகளுக்கு இடையில் கடுமையான பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ளன.

சிறுபான்மை கட்சிகளான தமிழ், முஸ்லிம் கட்சிகள், ஏதோவொரு வகையில், சில சபைகளுக்காக, பெரும்பான்மை கட்சிகளுடன் தொங்கியே பயணிக்க வேண்டும். தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என உறுதியாக நம்பும் சபைகளுக்காகத் தனித்து போட்டியிடக் கூடும்.

வேட்பு மனுக்களை மார்ச் 20ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் தாக்கல் செய்ய வேண்டும். கட்டுப்பணம் ஏற்கும் நடவடிக்கை முதல் நாளான மார்ச் 19ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு நிறைவடையும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளமையால், வியூகம் அமைக்கும் பரந்த கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம், எதிர்வரும் ஜூலை மாதம் 02ஆம் திகதிக்கு முன்னர் சகல சபைகளுக்கான நியமனங்களையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதால், மே மாதம் முதல் வாரத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட வாய்ப்புகள் அதிகமாகும். அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்புகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு இன்னும் இரண்டொரு நாட்களுக்குள் விடுக்கும்.

2025ஆம் ஆண்டு, 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெறும். கல்முனை மாநகர சபை, தெஹியத்த கண்டிய பிரதேச சபை, மன்னார் பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை ஆகிய தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளமையால், தீர்ப்பு பின்னரே அவை தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படும். எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது உங்களுக்குத் தெரியும்.

மேலே குறிப்பிட்ட ஐந்து சபைகளையும் தவிர்த்து 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 272 பிரதேச சபைகளுக்குத் தேர்தல் நடைபெறும். இந்த தேர்தல்களில், உங்களுக்கு நன்கு தெரிந்த, அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே போட்டியிடுவார்கள்.

ஆகையால், வாக்காளர்களாகிய உங்களுடைய தெரிவு மிகச் சிறந்ததாக இருந்தால் மட்டுமே, பிரதேசங்களுக்குச் சேவைகள் கிடைக்கும் என்பதே எமது அவதானிப்பு.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்


www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# பொறுப்புக் கூறல்; கதை தொடர்கிறது



எம்.எஸ்.எம். ஐயூப்

கடந்த மாதம் 25ஆம் திகதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித்த ஹேரத் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கையில் மனித உரிமை நிலைமைகளைப் பற்றி உரையாற்றினார். அன்றே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இங்கே சில இளைஞர்கள் மத்தியில் உரையாற்றும் போதும் மனித உரிமை பேரவையைப் பற்றி இலங்கை மக்களை எச்சரித்தார்.

அடுத்த செப்டெம்பர் மாதம் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாகப் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட இருப்பதால் அதைப் பற்றி எச்சரிக்கையுடன் இருக்குமாறு முன்னாள் ஜனாதிபதி கூறினார்.

மனித உரிமை பேரவை இலங்கை விடயத்தில் பிரேரணைகளை நிறைவேற்றுவது ஒன்றும் புதிய விடயமல்ல. அவ்வாறிருக்க, மனித உரிமை பேரவை பிரேரணை நிறைவேற்றப் போகிறது எனவே கவனமாக இருக்க வேண்டும் என்று கூறுவதன் மூலம் ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறாரா?

மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக 2009ஆம் ஆண்டு முதல் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளன. முதலாவது பிரேரணை 2009ஆம் ஆண்டு அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் முடிவடைந்து 10 நாட்களில் அதாவது 2009ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டது. அது அரசாங்கத்துக்குச் சாதகமாகவே நிறைவேற்றப்பட்டது.

பின்னர் 2012, 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா தலைமையில் சில நாடுகள் பிரேரணைகளை முன்வைத்தன. அவை இலங்கை அரசாங்கத்தை எச்சரிக்கும் பாணியிலான பிரேரணைகளாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் அவற்றை நிராகரித்தது.

நல்லாட்சி என்று தமக்குத் தாமே முத்திரை குத்திக்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையிலான அரசாங்கம் 2015, 2017 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் வேறு நாடுகள் சமர்ப்பித்த பிரேரணைளுக்கு அனுசரணை வழங்கியது. இதனை பல நாடுகளின் தலைவர்கள் பாராட்டினர்.

ஆனால், 2022ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது, இந்த விடயத்தில் ரணில் விக்ரமசிங்கவின் கொள்கை மாறியிருந்தது. இலங்கையில் மனித உரிமைகளை மீறியவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் வெளிநாடுகளில் சட்ட நடவடிக்கை எடுக்க வசதியாகத் தரவுகளை களஞ்சியபடுத்த 2021ஆம் ஆண்டு மனித உரிமை பேரவை பிரேரணையொன்றின் மூலம் முடிவு செய்தது. இத் திட்டத்தைப் பலப்படுத்த 2022ஆம் ஆண்டு மற்றொரு பிரேரணை கொண்டுவரப்பட்ட போது ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் அதனை நிராகரித்தது.

இப்போது அவர் மனித உரிமை பேரவையின் மற்றொரு பிரேரணையைப் பற்றி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எச்சரிக்கிறார். சிலவேளை அவர் இவ்வருட பிரேரணையையும் நிராகரிக்க வேண்டும் என்பதையே சூசகமாக கூறுகிறார் போலும். கடந்த வருட பிரேரணையைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் நிராகரித்தது.

அத்தோடு அவர் உக்ரேன் மற்றும் இலங்கை விடயத்தில் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாக ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களையும் மேற்படி கூட்டத்தின் போது விமர்சித்துள்ளார். உக்ரேனில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமைக் குறித்து ஐரோப்பியத் தலைவர்கள் மௌனம் சாதிப்பதாக கூறிய அவர் இலங்கையில் உரிய காலத்தில் தேர்தல்கள் நடைபெறுவதாகவும் கூறியிருந்தார். கடந்த வருடம் நடைபெற்ற தேர்தலில் அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதாகவும் அவர் கூறியிருந்தார்.

2023ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக அவ்வாண்டுக்கான வரவு-செலவு திட்டத்தால் நிதி ஒதுக்கீடு செய்திருந்தும் ரணிலின் அரசாங்கம் தேர்தலுக்காக அந்நிதியினை விடுவிக்காதமையால் அத்தேர்தல்கள் நடைபெறவில்லை.

இதன் மூலம் நிதி அமைச்சர் என்ற வகையில் ரணில் விக்ரமசிங்கவும் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர்களும் பொது மக்களின் அடிப்படை உரிமையை மீறியுள்ளதாக கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. தேர்தல் நடத்தாமையிட்டு நாட்டின் அதி உயர் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டவர் தான் இலங்கையில் உரிய நேரத்தில் தேர்தல்கள் நடைபெறுவதாக இப்போது கூறுகிறார்.

தாம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியமையால் அனுரகுமார ஜனாதிபதியாக இருக்கிறார் என்ற கருத்தையும் அவர் கூறியிருக்கிறார். ஆனால், அவர் ஜனாதிபதியின் பதவிக் காலம் விடயத்தில் அரசியலமைப்பு திருத்தம் ஒன்றின் மூலம் ஜனாதிபதித் தேர்தலையும் ஒத்திப் போட முயன்றார் என்பதையும் அரசியல் ஆர்வம் உள்ள எவரும் மறக்கவில்லை.

கடந்த வருடம் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணை முன்வைக்கப்பட்ட போது, அனுரகுமார ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று சில நாட்களே கழிந்திருந்தன. 2009ஆம் ஆண்டு மனித உரிமை பேரவையில் இலங்கைத் தொடர்பான முதலாவது பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது முதல் அனுரகுமார தலைமை தாங்கும் மக்கள் விடுதலை முன்னணியோ தேசிய மக்கள் சக்தியோ அப்பிரேரணைகளைப் பற்றிய தமது நிலைப்பாட்டை ஒருபோதும் தெரிவிக்கவில்லை.

எனவே, கடந்த வருடப் பிரேரணை விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்ன செய்யும் என்ற கேள்வி எழுந்தது. மக்கள் விடுதலை முன்னணி இடதுசாரி கட்சி என்பதால், அரசாங்கம் பிரேரணையை ஆதரித்து வாக்களிக்கும் என்றும் பலர் நினைத்தனர். ஆனால், அரசாங்கம் அதனை நிராகரித்தது.

இதனையடுத்து, அறிக்கையொன்றை வெளியிட்ட சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் பாபு ராம் பான்ட் ஜனாதிபதித் தேர்தலை அடுத்து, நாடு அரசியல் மாற்றத்துக்கான காலகட்டமொன்றைக் கடக்கும் நிலையிலும், பொதுத் தேர்தல் அடுத்த மாதத்தில் நடைபெறவிருந்த நிலையிலும் இலங்கை அரசாங்கம் கடந்த காலத்திலிருந்து விடுபட்டு மனித உரிமை பேரவையின் இலங்கை தொடர்பான பொறுப்புக் கூறல் திட்டத்தோடு இணைந்து செயல்படுவது முக்கியமானதாக இருந்தது. ஆனால், அரசாங்கம் கடந்த கால கொள்கையையே தொடர முடிவு செய்தமை ஏமாற்றத்தை அளித்தது என்று குறிப்பிட்டு இருந்தார்.

ஆனால், கடந்த காலத்திலிருந்து விடுபட அரசாங்கம் விரும்பியிருந்தாலும், அவ்வாறு செய்ய முடியாத ஒரு நிலைமை அப்போது இருந்தது. 42 வீத வாக்குகளை மட்டுமே பெற்று ஜனாதிபதி பதவியை ஏற்ற தேசிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலை எவ்வகையிலாவது வெற்றி பெற வேண்டும் என்ற நிலையிலேயே அப்போது இருந்தது. இந்த நிலையில், ஜெனிவா பிரேரணையை ஆதரித்து பெரும்பான்மை மக்களைப் பகைத்துக் கொள்வதானது பல்லாயிரக்கணக்கான தமது தோழர்களைப் பழி கொடுத்து ஆட்சி அதிகாரத்துக்காக 59 வருடங்கள் போராடிய ஒரு கட்சியால் சிந்தித்துப் பார்க்கவும் முடியாத காரியமாகும்.

அரசியலமைப்பின் வரையறைக்குள் பலமான உள்ளக பொறிமுறையொன்றை நிறுவுவதே தமது அரசாங்கத்தின் நோக்கம் என்று அமைச்சர் விஜித்த ஹேரத் மனித உரிமை பேரவையில் கூறினார். இலங்கையில் பதற்ற நிலையை உருவாக்கும் இனவாதம் மற்றும் சமயத் தீவிரவாதத்தால் உருவான வன்செயல்களைப் பற்றி விசாரணை செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கான பணிகளைப் பலப்படுத்துவதும் அதில் அடங்கும் என்றும் அவர் கூறினார்.

போர்க் காலத்தில் சர்வதேச மனித உரிமை மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறியவர்களைப் பொறுப்புக் கூறச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் செயற்படும் மனித உரிமை பேரவையின் அதிகாரிகளை அவரது இந்த உரை திருப்திப்படுத்துமா என்பது சந்தேகமானதாகும்.

உண்மையை கண்டறியும விடயத்தில் இலங்கை அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் தமது வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. உண்மையைக் கண்டறிவதற்கான பொறிமுறையொன்றைப் பற்றி இலங்கை சார்பில் முதன் முதலாக 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அப்போதைய வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீரவே மனித உரிமை பேரவையில் வாக்குறுதி அளித்தார். கடந்த கால வாக்குறுதி மீறல்களை வைத்து எம்மை எடைபோடாதீர்கள் என்றும் அவர் சர்வதேச சமூகத்திடம் கேட்டுக்கொண்டார்.

அதன் பின்னர் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமும் அவர் இரண்டு மாதங்களில் உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நிறுவுவதாக அப்பேரவையில் கூறினார். ஆயினும், இரண்டு மாதங்களில் அல்ல, 20 மாதங்களில் அதாவது 2018 ஒக்டோபர் மாதமே அவ்வாறானதோர் பொறிமுறைக்கான எண்ணக்கருப் பத்திரமொன்று (concept paper) அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதனையடுத்து, மேலும் நான்காண்டுகளுக்குப் பின்னர் 2023 ஜனவரியில் அதே நோக்கத்துக்காக மற்றொரு எண்ணக்கருப் பத்திரமொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஏதோ ஒரு புதிய விடயத்தை கையாளவதைப் போல் உண்மையைக் கண்டறியும் பொறிமுறையைப் பற்றி ஆராய அதே ஆண்டு மார்ச் மாதம் அமைச்சர்களான அலி சபரியும் விஜயதாக ராஜபக்ஷவும் தென்னாபிரிக்கவுக்கு ஐந்து நாள் விஜயமொன்றை மேற்கொண்டனர். அவர்கள் எதை ஆராய்ந்த எதைக் கற்றார்கள் என்பது அவர்களுக்கு மட்டுமே தான் தெரியும். அதே ஆண்டு டிசெம்பர் மாதம் உண்மையைக் கண்டறியும் பொறிமுறைக்காக சட்ட மூலமொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

ரணில் கடந்த செப்டெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடையும் வரை அச்சட்ட மூலம் நாடாளுமன்றத்துக்கு வரவேயில்லை. இப்போது ஏதோ புதிய விடயத்தைப் போல் அமைச்சர் விஜித்த ஹேரத் நாம் உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நிறுவுவோம் என்கிறார்.

கதை தொடர்கிறது.



## வாழ்வியல் தரிசனம்

கடவுள் மாயப்பொருள் அல்ல; உண்மைப் பொருள். பாவங்களைச் செய்யும் பாவிகள், கடவுள் அதைக் கண்டுகொள்ள மாட்டார் என்று எண்ணிவிடுகின்றனர். இத்தகையவர்கள் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதேயில்லை.

இவர்களுக்கு கடவுள் ஊடாக இயற்கையும் தண்டனை வழங்கும். எந்தவொரு மனிதனும் இயற்கையின் விதிகளை மீறமுடியாது.

எதையும் சிந்திக்காது உணர்வுகளுக்கு அடிமைப்பட்டால், செய்யும் தவறுகளை உணரமுடியாது. இளமையில் இருந்தே யாவரும், தங்களைத் தாங்களே நல்வழியில் புதுப்பித்த வண்ணம் இருக்க வேண்டும். வயதில் மூத்தவர்களும்கூட, தங்களின் நிலை உணராது திணறுகின்றர். பெற்றோரின் பொறுப்பானது, பிள்ளைகளை ஒழுக்கத்தின் ஊடாகப் பிரகாசிக்கச் செய்யவேண்டும்.

உலகில் கோடானுகோடி மக்கள் இருந்தாலும், ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறானவர்கள்தான்.

எனவே, தனிநபர்களுக்கு தங்களை உருவாக்கும் பொறுப்பு இருக்கிறது. நல்லோர்கள் இணைந்தால் புவனம் தானாகவே மிளிரும். நற்கருமம் அழிவதில்லை.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### மலசலக்கூடத்தால் பொதுமக்கள் அசௌகரியம்

முல்லைத்தீவு - முறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள மலசலக்கூடம் சுத்தம் செய்யாது துர்நாற்றம் வீசுவதால் ஆலயத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பாரிய அசௌகரியத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் அமைந்துள்ள முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தை கடந்தே, வடபகுதியை அடைய முடியும்.

எனவே, இந்த வீதியினூடாகப் பயணிக்கும் பயணிகள், இவ்வாலயத்தில் தரித்த பின்னரே, தமது பயணத்தைத் தொடருவர்.

இவ்வாறு இயங்கி வரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க முறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்குத் தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். அங்கு வருபவர்கள் மலசலக்கூடத்தைப் பயன்படுத்துவதற்காக ஒருவருக்கு 20 ரூபாய் அறவிட வேண்டும்.

இப்படி பணத்தைப் பெற்றுக்கொண்டு மலசலக்கூடத்தைச் சுத்தம் செய்யாது துர்நாற்றம் வீசுவதால் அங்கு வரும் மக்கள் பாரிய அசௌகரியத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த ஆலயம் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மேற்பார்வையில் இயங்கி வருவதாக கூறப்படுகின்றது. எனவே, மலசலக்கூடத்தின் முக்கியத்துவத்தை அறிந்து அதனை நாள்தோறும் சுத்தம் செய்து மக்கள் பாவனைக்கு பெற்றுத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

- எஸ்.ரேணுகா



## நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் திருத்தம்



நிகழ்நிலை காப்புச் சட்டம் வெகுவிரைவில் திருத்தம் செய்யப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு ஊடகங்கள் மற்றும் சிவில் தரப்பினரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, அமைச்சரவை யோசனை கடந்த மாதம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, வெகுஜன ஊடகத்துறை அமைச்சு, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு ஆகிய அமைச்சுகளை ஒன்றிணைத்து உப குழு ஒன்றை அமைத்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன. இறுதி வரைபை இந்த மூன்று அமைச்சுகளும் ஒன்றிணைந்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நிகழ்நிலை காப்புச் சட்டம் வெகு விரைவில் திருத்தம் செய்யப்படும். நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் பிரகாரம் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை.தடுப்புக் காவலில் வைக்கப்படவில்லை. வழக்குத் தாக்கல் செய்யப்படவி ல்லை. பொதுமக்களின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை நாங்கள் முழுமையாகப் பாதுகாப்போம் .அதில் யாருக்கும் சந்தேகம் தேவையில்லை என்றார்.

## "எமக்கான நீதியை வழங்க வேண்டும்"



கல்முனை - வடக்கு பிரதேச உப செயலகத்தைப் பிரதேச செயலகமாக தரமுயர்த்தி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய போதிலும், இன்றுவரை அது தரமுயர்த்தப்படாமை, அதற்கான அதிகாரங்கள் வழங்கப்படாமை தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசு விசேட குழு ஒன்றை அமைத்து விசாரணை செய்து எமக்கான நீதியை வழங்க வேண்டும் என தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்ற 2025இற்கான பட்ஜெட் மீதான குழு நிலை விவாதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார். 33 வருடங்களாக அநீதி இழைக்கப்பட்ட ஒன்றுக்காக நாங்கள் பல தடவைகள் இந்த உயரிய சபையில் பேசியிருக்கின்றோம். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் சம்பந்தமாக, இந்த பிரதேச செயலகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி சம்பந்தமாக மீண்டும் பேசுகிறேன். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் சம்பந்தமாக நான் வாய்மூல விடைக்கான நேரத்தில் கேள்விகளை முன்வைத்திருந்தேன். அதற்குப் பதிலளித்த பிரதியமைச்சர் அடுத்த அமர்வில் பதில் வழங்குவேன் என கூறியிருந்தார். ஆனால் இன்றுவரை பதில் தரவில்லை. கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பது 1989 உப பிரதேச செயலகமாக இருந்தது. அதன் பின்னர் 1993இல் உப குழுவின் அறிக்கை மூலம் 1993 -09-28 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதியோடு அது முளை அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது என்றார்.

## "போராட்டத்தை ஏற்க முடியாது"



சுகாதார சேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ள நாடளாவிய ரீதியில் வியாழக்கிழமை(06) பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதாக சுகாதார சேவையாளர்கள் அறிவித்துள்ளமை முறையற்றது இதை ஏற்க முடியாது என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

2025 வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட சுகாதார சேவைகளின் மேல் மற்றும் கீழ் நிலை உத்தியோகஸ்தர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சம்பள அதிகரிப்பை நன்கு அறிந்தும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசகராக செயல்பட்ட சமன் ரத்னபிரிய பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

2023 பெப்ரவரி மாதமளவில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் சம்பள முரண்பாடு மற்றும் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அப்போதைய ஜனாதிபதி ரணிலிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போது ' சம்பள அதிகரிப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுங்கள்' என்று தன்னிச்சையான முறையில் கூறியிருந்தார். இதற்கு எதிராக அன்று எவரும் போராட்டத்தில் குதிக்கவில்லை. பொருளாதார பாதிப்பினால் சுகாதார சேவையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளார்கள் என்பதை நாம் அறிவோம். பெரும்பாலான வைத்தியர்கள், தாதியர்கள் நாட்டை விட்டு வெளியேறினார்கள். ஏனைய வைத்தியர்கள் பாரிய நெருக்கடிக்கு மத்தியில் மக்களுக்கு சேவையாற்றினார்கள் என்றார்.

### நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை


## "எப்போது திருத்த எதிர்பார்க்கிறது"



இலங்கையில் காணப்படும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை இந்த அரசாங்கம் எப்போது திருத்த எதிர்பார்க்கிறது?இந்தச் சட்டத்தின் கீழ் எத்தனை சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்? கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் எத்தனை குற்றவாளிகள் சட்டத்தின் மூலம் தண்டிக்கபட்டு ள்ளார்கள்? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசிடம் கேள்வி எழுப்பினார். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) இவ்வாறு கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் கூறுகையில்,

இலங்கையின் அ தியுயர் சட்டமான அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் ஊடாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்திற்குப் பாதகம் விளைவிக்கும் வகையில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவது தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய தேர்தல் முழக்கங்களில் ஒன்றாகும். மேலும் புத்தாக்கம் மற்றும் உயர் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி "டிஜிட்டல் பொருளாதாரத்தை" அறிமுகப்படுத்துவது அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாகக் குறிப்பிடப்பட்டாலும், முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் மூலம் முதன்மை நோக்கம் அதுவல்ல என்று தெரிகிறது. எனவே, நான் பின்வரும் கேள்விகளைக் கேட்கிறேன், சரியான பதில்களையும் விளக்கங்களையும் அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கிறேன். இலங்கையில் காணப்படும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை இந்த அரசாங்கம் எப்போது திருத்த எதிர்பார்க்கிறது? இச்சட்டம் திருத்தப்படும் வரை இச்சட்டத்தை வலுவற்றதாக மாற்றுவீர்களா? அவ்வாறு இல்லை என்றால், ஏன்? இந்த சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கு அல்லது முழுவதுமாக ரத்து செய்வதற்கு அரசாங்கம் இதுவரை என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளன? இந்தச் சட்டத்தின் கீழ் எத்தனை சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்? அவர்களில், எத்தனை சந்தேக நபர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்? கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் எத்தனை குற்றவாளிகள் சட்டத்தின் மூலம் தண்டிக்கப் பட்டுள்ளார்கள்? என்று வினவினார்.

## இன்று விபூதிப் புதன்



# தவக்காலம் ஆரம்பம்



இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை நினைவுகூரும் தவக்காலம் புதன்கிழமை (04) ஆரம்பமாகிறது. மண்ணால் படைக்கப்பட்ட மனிதன் மீண்டும் மண்ணுக்குத் திரும்புவான் என்பதை நினைவுபடுத்தும் விதமாக விபூதிப் புதனன்று கத்தோலிக்கர்கள் நெற்றியில் விபூதி பூசப்படுகின்றது.

விபூதிப்புதன் முதல் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு வரையில் இந்த தவக்காலம் அனுஷ்டிக்கப்படுகின்றது. மனமாற்றத்தின் காலமான தவக்காலத்தில் நோன்பு இருத்தல், ஒறுத்தல்கள், ஜெபகங்கள் தவங்கள் போன்ற நல்ல காரியங்களில் ஈடுபடுவர்.

விபூதிப் புதன் அல்லது சாம்பல் புதன், கத்தோலிக்க மக்கள் தேவாலயம் சென்று வழிபட வேண்டிய முக்கியமானதும் கட்டாயமானதுமான கடன் திருநாளாகும். இதைச் சகோதரத்துவத்தின் நாள் என்றும் கூறுவார்கள்.

எல்லா மதங்களின் தத்துவத்திலும் இருக்கும் நிலையாமையை உணர்ந்து, இறைவனுடன் இணைய அழைப்பதை விபூதிப் புதன், கிறிஸ்தவ மதத்திலும் வலியுறுத்துகிறது.

கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கும் 40 நாட்கள் தவக்காலம் என்பது இந்த விபூதிப்புதன் தினத்திலிருந்தே தொடங்குகிறது. இயேசு சிலுவையில் மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழும் உயிர்த்த ஞாயிறு பெருவிழாவுக்கு முந்தைய நாற்பது நாள்களையும் தவக்காலமாகப் பின்பற்றப்படுகிறது.

தவக்காலம் என்பது கடந்தகாலத்தில் செய்த தவறுகளை உணர்ந்து திருந்தவும் மீண்டும் தவறுகளைச் செய்யாமல் உறுதியெடுத்துக்கொள்ளவும் மனம் வருந்தி, ஒறுத்தல் மூலமும் உண்ணா நோன்பு இருந்து நம்மை நாமே தூய மனிதர்களாகத் தயார் செய்துகொள்ளக் கடவுளால் தரப்பட்டிருக்கும் காலம் என கொள்ளலாம்.

இந்தத் தவக்காலத்தில் மூன்று முக்கிய அம்சங்களை அதாவது, நோன்பிருத்தல், இறை வேண்டல், அறச் செயல்கள் (செபம், தபம், தர்மம்) புரிதல் போன்றவற்றை விசேசமாகக் கத்தோலிக்கர்கள் கடைப் பிடிப்பர்.

நோன்பிருந்து உணவைத் தள்ளிவைத்து உடலை வருத்துவ தோடல்லாமல் செபத்தின்வழி, இறைவனோடு உறவாடி தம் குற்றம் குறைகளையும் பலவீனங்களையும் தவறுகளையும் உணர்ந்து மனமாற்றம் பெறும் தருணம் ஆகும். பிறருக்கு உதவவும் இருப்பதைப் பிறருக்குக் கொடுத்து, பிறரோடு பகிர்ந்து கொண்டு, தர்ம காரியங்களில் ஈடுபடுவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்ட ஒப்பற்ற காலமாகும்.

நோயாளிகளைப் பார்த்து அவர்களது மனக்குறைகளைக் கேட்டறிந்து மனிதநேயத்துடன் வாழும் காலமாகும். 'தன்னைப் போல் பிறனையும் நேசி' என்ற இயேசு பெருமானின் கருத்தை உள்ளத்தில் கொண்டு உலகிலுள்ள மானிடர் அனைவரும் என் சகோதரர்கள்; என் சகோதரிகள் என்ற உறவோடும், உணர்வோடும் வாழத் தூண்டுவதும் இத்தவக் காலத்தின் நோக்கமாகும்.

குருத்தோலை ஞாயிறன்று வழங்கப்படும் ஓலைகளைச் சிலுவை செய்து, வீடுகளில் ஒரு வருடம் வரையில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் மக்கள், அதனை விபூதி தினத்துக்கு முன் ஆலயத்தில் கையளிப்பார்கள். அந்த ஓலைகளை எரித்துப் பெறப்படும் சாம்பலே 'சாம்பல் புதன்' தினத்தில் நெற்றியில் பூசப் பயன்படுகிறது.

விபூதி புதனன்று தேவாலயத்துக்கு வரும் ஒவ்வொரு பக்தரின் நெற்றியிலும் "மகனே/மகளே நீ மண்ணாக இருக்கின்றாய், மீண்டும் மண்ணுக்கே திரும்புவாய் என்பதை மறவாதே" என்று கூறி, குருவானவர் சாம்பலினால் நெற்றியில் சிலுவை அடையாளம் வரைகிறார்.

உலக மீட்பர் இஜேசு கிறிஸ்து, சிலுவை மரணத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும் நிகழ்வுக்கு முன்பு, தனது மரணத்தை அறிந்து, ஒரு மனிதனாக வேதனை கொண்டு, நாற்பது நாள்கள் இரவும் பகலும் உண்ணாமல் வனாந்தரத்தில் நோன்பு இருந்தார். அந்த நோன்பின்போது, தனக்கு வரப்போகும் பாடுகளை எதிர்கொள்ள மனத்திடம் தரும்படி தனது தந்தையை நோக்கி இரந்து கேட்பதை வேதாகமத்தில் காணலாம். கிறிஸ்துவின் இந்தத் துயர அனுபவத்தில் இணையும் நோக்கத்தோடும் தவக்காலத்தைக் கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கிறார்கள்.

தவக்காலத்தில் ஆடம்பர அணிகலன்கள், மாமிச உணவு, கேளிக்கை, பொழுதுபோக்கு இவற்றை வெறுத்து ஒதுக்கி, அதன் மூலம் மிச்சப்படுத்தப்படும் பணத்தை ஏழைகளுக்கு வழங்குவதைக் கிறிஸ்தவர்கள் வழக்கமாக கடைபிடித்து வருகிறார்கள்.

இத்தவக்காலம் பொருளுள்ள காலமாக அமைந்திட, அநீதிக ளையும் தீயவற்றையும் இனம்காணும் மனமாற்றம் பெற்று, கிறித்துவை அடையாளம் காணும் அருளைப் பெற, ஆண்டவன் அருளை இறைஞ்சி மன்றாடுவோம்.



புதுடெல்லி

ஐக்கிய அரபு அமீரகத்தில்

# இந்திய பெண்ணுக்கு மரண தண்டனை


ஐக்கிய அரபு அமீரகத்தில் இடம்பெற்ற கொலை வழக்கில் இந்தியப் பெண்ணுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த ஷாகிதி கான் (வயது 33) என்பவருக்கே, இவ்வாறு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவர், கடந்த 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம், ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபி நகருக்குச் சென்றார். அங்கு ஒரு வீட்டில் குழந்தை பராமரிப்பாளராக பணிக்குச் சேர்ந்துள்ளார்.

2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம், பணி வழங்கிய தம்பதிக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. அந்த குழந்தையை குறித்த பெண்ணே பராமரித்து வந்துள்ளார். இதனிடையே, 2022 டிசெம்பர் 7ஆம் திகதி குழந்தைக்கு வழக்கமான தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. அன்றைய தினமே மாலை குழந்தை உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவத்தில் குழந்தையை, குறித்த பெண் கொலை செய்துவிட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதையடுத்து, அவரை 2023 பெப்ரவரி 10ஆம் திகதி



அபுதாபி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பின்னர், அல் வஹாப் சிறையில் அடைக்கப்பட்ட அவர் மீது வழக்கு விசாரணை நடைபெற்ற நிலையில், குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2023 ஜூலை 31ஆம் திகதி நடைபெற்ற விசாரணையின்போது, ஷாகிதி கானுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தனது மகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையைத் தடுத்து நிறுத்துமாறு ஷாகிதி கானின் தந்தை வெளியுறவுத்துறைக்குப் பலமுறை மனு கொடுத்துள்ளார்.



தெலுங்கானா

# ஒரே நாளில் 8,000 கோழிகள் மரணம்

ஆந்திராவின் கிருஷ்ணா, கோதாவரி மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான பண்ணை கோழிகள் கடந்த மாதம் உயிரிழந்துள்ளன. பறவை காய்ச்சலே இதற்கு காரணம் என இரத்தப் பரிசோதனையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, அந்த மாவட்டங்களில் பண்ணை கோழிகள் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, தமிழகம், கர்நாடகா, தெலங்கானாவிலும் ஆந்திராவின் கோழிகள் விற்பனை ஆகவில்லை.

தெலங்கானா மாநில எல்லைகளில் 24 இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைத்து ஆந்திர மாநில கோழிகளை தெலங்கானாவுக்குள் அனுமதிக்காமல் தடுத்துள்ளனர். ஆனாலும், தெலங்கானா மாநில எல்லையில் கம்மம் மாவட்டத்தில் கடந்த மாதம் பறவை காய்ச்சல் பரவியது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

உக்ரைனுக்கான இராணுவ உதவிகளை

# நிறுத்தியது அமெரிக்கா

உக்ரைனுக்கு வழங்கப்பட்டு வந்த இராணுவ உதவிகளை நிறுத்துவதாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

முன்னதாக அமெரிக்கா வந்திருந்த உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

எனினும், இருவரிடையேயான பேச்சுவார்த்தை வாக்குவாதமாக மாறியது. இதனால் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி பாதியிலே வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறியுள்ளார்.

இந்த நிலையில் தான் உக்ரைனுக்கான இராணுவ உதவிகள் நிறுத்தப்படுவதாக, அமெரிக்கா அறிவித்துள்ளது.

மேலும், அமைதிக்கான நல்லிணக்க உறுதிப்பாட்டை உக்ரைன் வெளிப்படுத்தும் என்று உறுதி அளிக்கும் வரை தற்போது வழங்கி வரும் அனைத்து விதமான இராணுவ உதவிகளையும்



அமெரிக்கா நிறுத்தியுள்ளதாக, ப்ளூம்பெர்க் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், இதே தகவல்களைப் பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட பாதுகாப்புத் துறை அதிகாரி தெரிவித்ததாக, அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியாகி இருக்கும் தகவல்களின் படி, உக்ரைன் செல்லாத அமெரிக்க இராணுவ உபகரணங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக்:

# இங்கிலாந்தை வென்ற தென்னாபிரிக்கா




சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் இருபதுக்கு -20 தொடரில், வதோதராவில் திங்கட்கிழமை(03) நடைபெற்ற தென்னாபிரிக்க மாஸ்டர்ஸ் அணியுடனான போட்டியில் இங்கிலாந்து மாஸ்டர்ஸ் அணி வென்றது.

ஸ்கோர் விவரம்:
நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா
இங்கிலாந்து: 157/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: டிம் அம்பிறோஸ் 53 (45), ஓய்ன் மோர்கன் 36 (34), கிறிஸ் ஸ்கொபீல்ட் ஆ.இ 20 (14), கிறிஸ் ட்ரெம்லெட் ஆ.இ 19 (04) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹென்றி டேவிட்ஸ் 1/23 [4], கர்னெட் குரூகர் 1/23 [3], தன்டி தஷபாலா 1/30 [4], ஜக் கலிஸ் 0/12 [2
தென்னாபிரிக்கா: 159/3 (18.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹஷிம் அம்லா ஆ.இ 82 (55), அல்விரோ பீற்றர்சன் 56 (41) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸ்டூவர்ட் மீக்கர் 2/34 [4], நயான் சைட்பொட்டம் 1/18 [3], கிறிஸ் ஸ்கொபீல்ட் 0/29 [4], மொன்டி பனேசர் 0/34 [4])
போட்டியின் நாயகன்: ஹஷிம் அம்லா

# இன்டர் செல்லும் கிம்மிச்?



ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் மத்தியகளவீரரான ஜோஷுவா கிம்மிச்சைக் கைச்சாத்திடுவதற்கான போட்டியில் இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனும் இணைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலுக்கெதிராக இன்டர் பலத்த போட்டியாக இருக்குமெனக் கூறப்படுகின்ற நிலையில், 30 வயதான கிம்மிச்சைக் கைச்சாத்திட இன்னொரு பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலும் ஆர்வம் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

ஆண்டுக்கு ஆறு மில்லியன் யூரோக்கள் பெறுமதியான நான்கு ஆண்டுகள் ஒப்பந்தத்தை வழங்க இன்டர் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

மியூனிச்சுடனான கிம்மிச்சின் ஒப்பந்தம் நடப்பு பருவகாலத்துடன் முடிவடைகின்ற நிலையில், புதிய ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட அவர் தாமதிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் வின்ஷியஸ் ஜூனியர்

3. “புதிய ஒப்பந்தத்தை வேண்டும்”

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்றிட்டில், கனவில் வாழ்வதாகத் தெரிவித்த அக்கழகத்தின் முன்களவீரரான வினிஷியஸ் ஜூனியர், மட்றிட்டுடன் புதிய ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட விரும்புவதாகக் கூறியுள்ளார்.

மட்றிட்டுடனான 24 வயதான வினிஷியஸின் தற்போதைய ஒப்பந்தமானது இன்னும் இரண்டு ஆண்டுகள் காணப்படுகின்ற நிலையில், சவுதி அரேபியக் கழகங்கள் அவரைக் கைச்சாத்திட முயலுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மார்க்ரமுக்கு காயம்:

# லின்டேயை அழைத்த தென்னாபிரிக்கா



சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான தென்னாபிரிக்க குழாமுடன் பயணிக்கும் மேலதிக வீரராக இடதுகை சுழற்பந்துவீச்சு சகலதுறைவீரரான ஜோர்ஜ் லின்டி இணைந்து கொள்ளவுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான போட்டியின்போது, வலது கெண்டைக்கால் பின்தசையில் ஏய்டன் மார்க்ரம் காயமடைந்த நிலையிலேயே தென்னாபிரிக்க அணியுடன் லின்டி இணைந்து கொள்ளவுள்ளார்.

உலகக் கிண்ணத் தேர்வுக்கு

# ‘முஷ்பிக்கூர், மகமதுல்லா தம்மை நிரூபிக்க வேண்டும்’

பங்களாதேஷின் சிரேஷ்ட வீரர்களான முஷ்பிக்கூர் ரஹீம், மகமதுல்லா ஆகியோர் ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியில் தமதிடங்களைத் தக்க வைப்பதற்க்கு தம்மை நிரூபிக்க வேண்டுமென பங்களாதேஷ் கிரிக்கெட் சபை திங்கட்கிழமை (03) தெரிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் மோசமான பெறுபேறுகளை முஷ்பிக்கூரும், மகமதுல்லாவும் வெளிப்படுத்தியிருந்தனர். இந்தியாவுக்கெதிராக ஓட்டமெதையும் பெறாத முஷ்பிக்கூர், நியூசிலாந்துக்கெதிராக இரண்டு ஓட்டங்களையே பெற்றிருந்தார். இந்தியாவுக்கெதிரான போட்டியில் காயம் காரணமாக பங்கேற்காத மகமதுல்லா, நியூசிலாந்துக்கெதிரான போட்டியில் நான்கு ஓட்டங்களையே பெற்றிருந்தார். பாகிஸ்தானுக்கெதிரான பங்களாதேஷின் போட்டி மழையால்



கைவிடப்பட்டிருந்தது.

இளம்வீரர்களை முஷ்பிக்கூரும், மகமதுல்லாவும் வழிநடத்துவார்களென எதிர்பார்க்கப்பட்ட நிலையில், நியூசிலாந்துக்கெதிராக இருவரும் ஆட்டமிழந்த பாணி விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 05 மார்ச் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.